முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1085

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.09.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார ஞானியே தேசிகா வாழ்க
ஓங்காரன் என் அவதாரமான அரங்கனே வாழ்க வாழ்க
உயர்வாக உமை வாழ்த்தியே சுப்ரமணியப்பெருமான் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசியை
உயர்வான உன் தவசித்தி நன்னாளில் எடுத்துரைப்பேன்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 01 நாள், 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை)
வகைபட அரங்கனுக்கு இன்னும் ஆற்றல் இன்று கூட இருக்க
உயர்வான அடியவர்களெல்லாம் அரங்கன் தடம் நாடி
3. சிந்தைபட உயர் தீட்சை பெற்று
செப்பிடுவேன் தர்மத்தில் உதவ வேண்டும்
விந்தைபட இந்த நன்நாளில்
வினவிட வேலவன் யான் ஆற்றலாக இறங்கி
4. இறங்கி பேரற்புதம் நிகழ்த்த இருக்க
இனிதே அடியவர்கள் ஒன்றிணைந்து
அரங்கன் நாமம் முழங்கி
ஐயமற தர்மம் பரப்பவேண்டும்
5. மிகைபட அரங்கனின் நாமஜெபத்தால்
மேலான மாற்றங்கள் அன்பர்கட்கு ஏற்படும்
வகைபட அரங்கனின் தர்மத்தை செய்வதால்
வல்லமை கூடி அவரவர் வினை அகன்றோடி
6. வையகமே இந்த தர்ம பாதுகாப்பை பெறும்
அரங்கன் வழி இன்று அற்புதம் நடத்த இருக்கின்றேன்
அன்பர்களே அணுகி ஆற்றல்பெற
ஆறுமுகன் என் பரிபூரண ஆசியும் அருளும் உண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–